# HSC 12th Standard

## சிறப்புத்தமிழ்

## மாதிரி வினாத்தாள்-2

காலம் : 2.30 மணி                    மதிப்பெண்:90

### பகுதி-I

**பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.    20 X 1 = 20**

1 பண்டைக் காலப் படை வகைகளுள் சிறப்பானதை உணர்த்தும் பாடலடி

அ. பாரதநாடு பழம்பெரும் நாடே

ஆ. பூரண ஞானம் பொலிந்த நன்னாடு

இ. நல்லன யாவையும் நாடுறு நாடு

ஈ. மாரத வீரர் மலிந்த நன்னாடு

2 அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோர் இடத்துண்மை யான்- இக்குறளில் யாருடைய தேற்றம் குறிக்கப்படுகிறது?

அ. அறிவைப் பெற்றவர்கள்    ஆ. அறிந்தவர்கள்

இ) தெளிவு பெற்றவர்கள்    ஈ. பிரிந்தவர்கள்

3. ‘நாடுகெழு தாயத்து நனந்தலை யருப்பத்து’ என்னும் பதிற்றுப்பத்துத் தொடரில் ‘அரண்’ எனப் பொருள் தரும் சொல் எது?

அ. நாடு    ஆ. நனந்தலை

இ.தாயம்    ஈ. அருப்பம்

4 “முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்; பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்” – இவ்வடிகளில் தலைவனின் புறச்செயல் பற்றிக் குறிக்கும் சொல் எது?

அ. கண்ணோடாது    ஆ. உயிர்வௌவல்

இ. போற்றல்    ஈ. பொறுத்தல்

5. கணியன் பூங்குன்றனாரின் ‘நீர்வழிப்பட்ட புணை’ எனும் புறநானூற்றுப் பாடலடியின் தாக்கம் பெற்றுள்ள பாடலடி

அ. சாதலும் பிறத்தல் தானும் தம்வினை

ஆ. தீம்புனலில் செல்மரம் போல

இ. கல்பொருது இரங்கும் கதம்வீழ் அருவி

ஈ. நீரின்றமையா உலகம்

6. “கதிர் முடியும் இம்மையிலே கண்ணுற்றேனே” – இங்குக் குறிக்கப்பெறும் கதிர்முடிக்கு உரியவர்

அ. அர்ச்சுனன் ஆ. கன்னன்

இ. கண்ணன் ஈ. துரியோதனன்

7. ‘சேற்றிலே சேர்ந்துழலும் சீரற்ற சமுதாயம் மாற்றியோர் உலகு செய்வோம்’- இவ்வடிகள் தரும் பொருளை வெளிப்படுத்தும் தொடர்

அ நிலையும் விழைவும் ஆ செயலும் நன்மையும்

இ அழிவும் ஆற்றலும் ஈ. ஆற்றலும் போற்றலும்

8. பூவிதனில் தண்புனலாய்க் கொட்டுவதை ஏதென்பார்?- இவ்வினாவிற்குரிய விடை ‘கார் காலம்’ என உணர்த்தும் குறிப்புச் சொல் எது?

அ. அனல் ஆ. கொட்டு

இ. பூவி ஈ. தண்

9 அழகிய சிற்றம்பலக் கவிராயர் நல்ல செல்வர். அவர் குடும்பத்தில் கலைமகளும் திருமகளும் ஒருங்கே களிநடம் புரிந்தனர்- இப்பகுதியில் சிறப்புக் குறிப்பைக் கொண்டுள்ள தொடர்

அ. அழகிய சிற்றம்பலக்கவிராயர் ஆ. நல்ல செல்வர்

இ. கலைமகளும் திருமகளும் ஈ. ஒருங்கே களிநடம்

10 ஈழத்துப் பேச்சு வழக்கில் உள்ள கீழ்க்குறித்த சொற்களுள் சாலினி இளந்திரையனாரால் எம்மொழியென அறியப்படாத சொல்

அ. சந்தாலே ஆ. முஸ்பாத்தி

இ.கந்தோர் ஈ. பனாட்டு

11 அறிவு பெறும் வழிகளாகப் பெருஞ்சித்திரனார் குறித்தனவற்றுள் பிறர் ஒத்துழைப்பால் பெறப்படுவது

அ. காட்சி ஆ. கேள்வி

இ.உசாவல் ஈ. கல்வி

12 மரபுத் தொடராட்சி பெற்றுள்ள சொற்றொடர்

அ. தன்னை வாழவைக்கும் இயற்கையை வாழ்த்தத் தலைப்பட்டான்

ஆ. இயற்கையின் தீயசக்திகள் அச்சுறுத்தின

இ. இயற்கையால் வரும் துன்பத்தை அறிந்து வருந்தினான்.

ஈ. அச்சம், போராட்டம் பற்றிய நினைவுகளால் தெய்வச் சிந்தனை மனிதனுக்கு ஏற்பட்டது.

13 பாரதிதாசனின் இலக்கியப் படைப்புகள் எப்போதுமே மக்களுடைய வாழ்க்கையையே அணுகி வந்துள்ளது. குடும்ப விளக்கின் ஐந்து பகுதிகளும் இதற்குச் சான்றுகளாகும். இவ்வுரையில் எடுத்தாளப்பட்டுள்ள கீழுள்ள நான்கனுள் மாறுபட்ட பொருளாட்சி கொண்டது

அ. இலக்கியப் படைப்புகள் ஆ. குடும்ப விளக்கு

இ. ஐந்து பகுதிகள் ஈ. மக்களுடைய வாழ்க்கை

14 கீழுள்ளவற்றுள் தமிழகத்தின் தொன்மையினை வெளிப்படுத்தும் முதன்மைச் சான்று

அ. அயல்நாட்டார் குறிப்பு ஆ. கல்வெட்டு

இ புராணங்கள் ஈ. மக்களிடை வழங்கும் கதைகள்

15 ஆகுபெயர் பயன்படுத்தப்படாத பழமொழி

அ. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

ஆ. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

இ. ஆலும் வேலும் பல்லுக்குறுதி

ஈ. நாளும் கிழமையும் நலிந்தோர்க்கில்லை

16 'ஆறும் தருவது வினையே '- இந்நூற்பா குறிப்பிடும் ஆறனுள் அடங்காதது

அ. செய்பவன் ஆ. செய்பொருள்

இ. பயன் ஈ. இடம்

17 ஒன்றுக்கும் மேற்பட்ட இடைச்சொல் பெற்றுள்ள சொல்

அ. நடந்தனன் ஆ. உண்ணாய்

இ. அப்பையன் ஈ. பொன்னன்

18 கீழ்வருவனவற்றுள் உற்றறிதல் மட்டும் பெற்ற உயிர்

அ. மரம் ஆ. சங்கு

இ. எறும்பு ஈ. தும்பி

19 கீழுள்ளனவற்றுள் தற்குறிப்பேற்றவணிக்குப் பொருந்துவது

அ. இயல்பு நிகழ்ச்சியில் தன்கருத்தினை ஏற்றல்

ஆ. தன் கருத்தைக் கூறி பிறர் கருத்து விளக்கல்

இ. நடக்காத நிகழ்ச்சியை நடந்ததாகக் கூறுதல்

ஈ. ஒன்றை விளக்கிப் பிறிதொன்றைச் சொல்லுதல்

20 வஞ்சித்துறைக்கும் வஞ்சி விருத்தத்திற்கும் உள்ள வேறுபாடு அமையும் முறை

அ. அடிவகை ஆ. பாடல் எண்ணிக்கை

இ. சீர்வகை ஈ. அடி எண்ணிக்கை

## பகுதி II

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. வினா எண் 24-க்குக் கண்டிப்பாக விடையளிக்க வேண்டும்.** **7 X 2 = 14**

21 பாரதியார் குறிப்பு வரைக.

22 நெய்தற்கலி கூறும் ‘அறிவு’, ‘செறிவு’ குறித்து எழுதுக.

23 ‘சித்திரச் சிலைக்கை விசயன்’-யார்?, ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறார்?

24 ‘மகளிர் அறிவில் மரமாம் மனதில் உறுதி அலராம்’ – இப்பாடலுக்கு இருவகையான பொருள் தருக.

25 ‘பாடம் கீறுதல்’ என்னும் சொல்லாட்சி தமிழ் இலக்கியத்தில் உள்ளதற்குச் சான்று தருக.

26 தொல்காப்பியத்தில் தெய்வம் பெறுமிடம் பற்றிப் பேராசிரியர் ச.கணபதிராமன் கூறுவது யாது?

27 ஆபிரகாம் பண்டிதரின் இசை நூல்களைக் குறிப்பிடுக.

28 பாரதிதாசன் மானுடம் பற்றிப் பாடுவதற்குரிய ஏதுக்களாகக் கட்டுரையாசிரியர் திலகவதி எவற்றைச் சுட்டுகிறார்?

29 வஞ்சித்தளைக்குரிய சீர் அமைப்பு எது?

30 ஆகுபெயர் எத்தனை வகைப்படும் ?

## பகுதி – III **7 X 3 = 21**

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. வினா எண் 36-க்குக் கண்டிப்பாக விடையளிக்க வேண்டும் .**

31 காமத்திற்கும் தீக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமையினைத் திருக்குறள் வழி நின்று விளக்குக.

32 பதிற்றுப்பத்தில் பரணர் சேரனின் சிறப்பை “இனியார் உளரோ முன்னுமில்லை”- எனக்கூறி விளக்குவது யாது?

33 குருதிக்கொடையின் சிறப்புகளாகக் கவிஞர் வெற்றியழகன் கூறுவன யாவை?

34 வண்டிக்காரனின் பணிவுடைய சொல்லாட்சி மூலம் வெளிப்படும் பண்பாட்டுத்தன்மையினை விளக்குக.

35 சங்ககாலச் சிறு தெய்வங்களாகப் பேராசிரியர் ச.கணபதிராமன் குறிப்பன யாவை?

36 ‘ஈழமும் பாட்டைப் பாடுவதில்லை, படிக்கிறது’- இவ்வாக்கியம் உணர்த்தும் பொருளை விளக்குக.

37 ஆபிரகாம் பண்டிதரின் கல்விநிலை பற்றிக் கூறுக.

38 வினைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிடுக.

39 கருவியாகுபெயரை விளக்குக.

40 வஞ்சித்தாழிசை என்றால் என்ன?

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** 7 X 5 = 35

41 பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தில், திரிதராட்டிரனை உயர்ந்தவனாகப் பாரதியார் எவ்வாறு காட்டுகிறார்?

(அல்லது)

பதிற்றுப்பத்தில் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனின் வீரமும் வெற்றிச் சிறப்பும் எவ்வாறு விளக்கப்படுகிறது?

42 “மாரத வீரர் ….” எனத் தொடங்கும் நாட்டு வாழ்த்துப்பாடலை அடிபிறழாமல் எழுதுக.

(அல்லது)

“தொடிற்சுடின்…..” எனத் தொடங்கும் குறளையும், “ ……பழி”- என முடியும்

43 20-ஆம் நூற்றாண்டில் தொடக்க கால உரைநடையில் பிறமொழிச் சொற்கள் மலிந்திருந்தமையினை, டாக்டர் உ.வே.சா.வின் கட்டுரை கொண்டு வெளிப்படுத்துக.

(அல்லது)

உழைப்பின் பெருமையைப் பாவலரேறு திருக்குறள் வழி எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

44 மனிதனுக்குத் தெய்வச் சிந்தனை தோன்றி வளர்ந்தமைக்கான காரணங்களைப் பேராசிரியர் ச.கணபதிராமன் வழிநின்று விளக்குக.

(அல்லது)

பாரதிதாசனின் படைப்புகளில் ‘மானுடம்’ நிலைத்திருந்ததெனத் திலகவதி எவ்வாறு நிறுவுகிறார்?

45 இருமடி, மும்மடி ஆகுபெயர்களை விளக்கி எடுத்துக்காட்டுகள் தருக.

(அல்லது)

வேற்றுமையணியையஉரிய எடுத்துக்காட்டுடன் விளக்குக.

46 திருமந்திரத்தைப் பற்றி கட்டுரை ஒன்று வரைக.

(அல்லது)

மருந்து நூல்கள் மூன்றினை விளக்குக.

47 நும் ஊருக்கு சாலை வசதி வேண்டி உரிய அலுவலருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக.

(அல்லது)

‘சுற்றுச்சூழல் கல்வி’- என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று வரைக.